தினகரன்
10.3.2018 ● சனிக்கிழமை 17
நெல்லை

பாளை சாரதா மகளிர் கல்லூரியில்

மாணவிகள் பெற்றோருக்கு பாதபூஜை

பாளை சாரதா மகளிர் கல்லூரியில் இறுதி ஆண்டு படிக்கும் மாணவிகள் தங்கள் பெற்றோருக்கு பாத பூஜை நடத்தினர். உள்படம்: பாதபூஜை நிகழ்ச்சியில் தனது பெற்றோர் காலை தொட்டு வணங்கும் மாணவி.

நெல்லை,மார்ச் 10: பாளை சாரதா மகளிர் கல்லூரியில் ஒரே நேரத்தில் 700 மாணவிகள் தங்கள் பெற்றோருக்கு பாதபூஜை செய்து மகிழ்ந்தனர்.

நிகழ்ச்சியில் கல்லூரி கணினிப்பயன்பாட்டுத் துறை இயக்குநர் மற்றும் தலைவர் ராதாஜெயலெட்சுமி வரவேற்றார். கல்லூரி நிர்வாகி சுவாமி பக்தானந்தா, செயலர் யதீஸ்வரி சரவண பவப்ரியா அம்பா, யதீஸ்வரி துர்காபிரியா அம்பா,யதீஸ்வரிதவப்ரியா அம்பா ஆகியோர் ஆசியுரை வழங்கினர்.

இந்த உலகம் தாய் தந்தையருக்குள் அடக்கம், தாயைத் தெய்வமாக வணங்கவேண்டும். தாயிற் சிறந்த கோயிலும் இல்லை. தந்தைசொல்மிக்கமந்திரம் இல்லை என்று மாணவிகளுக்கு அறிவுரை கூறப்பட்டது.

இதைதொடர்ந்துமாணவிகள் தாய், தந்தையருக்கு பாதை பூஜைகளை செய்தனர். இதில் பாதங்களை பால், தயிர், மஞ்சள், தண்ணீர் விட்டு கழுவினர். பின்னர் சந்தனம், குங்குமம் வைத்து, மலர் தூவி அர்ச்சனையும், ஆரத்தி எடுத்து பூஜைகளை ஒரே நேரத்தில் 700 மாணவிகள் செய்தனர். பின்னர் பெற்றோர் காலில் விழுந்து வணங்கி ஆசீர்வாதம் மாணவிகள் பெற்றனர்.

கல்லூரி துணை முதல்வர் முத்துலெட்சுமி, இணை முதல்வர் பர்வதகிருஷ்ணம்மாள் மற்றும் கல்வியியல் கல்லூரி முதல்வர் மற்றும் பள்ளி முதல்வர் ஆகியோர் மாணவிகளை வாழ்த்தி பேசினர்.

இரண்டாமாண்டு கணிப்பொறியியல் துறை மாணவி காயத்ரி விழா அறிக்கைவாசித்தார். இந்நிகழ்ச்சியில்பேராசிரியர்கள், இளநிலைமற்றும்முதுநிலை மாணவிகள், கல்வியியல் கல்லூரி மாணவிகள் மற்றும் பெற்றோர்கள் கலந்து கொண்டனர். வேதியியல் துறை உதவி பேராசிரியர் [illegible]